50 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 25-5-33

காலம் கவிழ்ந்து போச்சு!



ஐயோ பாவம்! நெல்லைக் கலம் 3½ ரூபா விதம் விற்றுக் கொண்டிருந்த மிராசுதார் இன்று விலைவாசி குறைந்து போகவே கிணற்றில் விழுந்து தவிக்கின்றான். என்ன செய்தால் அவனைக் கரையேற்ற முடியுமென அறியாது உலகம் தவிக்கிறது.

யார் போய் சொன்னவர்?

கல்கத்தா காங்கிரஸுக்குச் சென்றவர்களை அநியாயமாகப் போலீஸ் அதிகாரிகள் நடத்தினார்களெனத் தலைவர் மாளவியா ஒரு அறிக்கையை விடுத்தது நேயர்களுக்கு ஞாபக மிருக்கும். இப்போது இது சம்பந்தமாகப் 'பார்லிமெண்டில் பேச்சு வந்தது. இந்த அநீதிகளை விசாரிக்க பொதுஜனக் கமிட்டியை அநுமதிக்க முடியாதென ஸாமுயேல் ஹோர் சொன்னது மன்றி வாயாடித்தனமாகவும் ஒரு வார்த்தை கூறினர். "இதுபற்றி வங்காள துரைத்தனம் ஒரு அறிக்கை வெளியிடப் போகிறது. மாளவியா போன்ற பெரிய தலைவர் கூட இத்தகைய பொய்யான, தவறான பிரசாரத்துக்கு உதவி செய்வதைக் காண எனக்கு வருத்தமா யிருக்கிறது" என்று கூறினர்.

குதிரை தூக்கிப் போட்டதுமன்றி குழியும் பறித்ததாம்! அந்த மாதிரி அரும் பெருந் தலைவர்களின் அறிக்கையை உதாசீனம் செய்தது மன்றி, மாளவியா போன்ற பெரியார், பொய்ப் பிரசாரத்துக்கு உதவி செய்வதாக ஸாமுயேல் ஹோர் வர்ணிக்கின்றார். என்ன திமிர்!

"வாய்ச் சொல்லில் வீரம்!"

திடீரென்று சீமையில் சாப்ருவுக்கு வீரம் பிறந்து, வாய்ச் சொல்லாகப் பொழிந்து விட்டாராம். யாரிடத்தில் இந்த வார்த்தைகள் தெரியுமா? ஹோருக்கு எதிரே யல்ல! சாங்கியின் எதிரே யல்ல! ஒரு பத்திரிகை நிருபருக்கு பேட்டி தரும்போது வாய் வீரம் காட்டிப் பேசினாராம்.

"காங்கிரஸ் இயக்கத்தைத் துரைத்தனம் தற்போது நிறுத்தி விட்டதென்னவோ வாஸ்தவம். ஆனால் இந்தியர்களுக்குள் கொதித்துக் கொண்டிருக்கும் ஆவேசத்தை சர்க்கார் அடக்கவில்லை. ஆவேசம் உள்ளூர ஓடியிருக்கிறது. அது அதிருப்தியை அதிகரித்திருக்கிறது. இந்த நிலையில் எந்த அரசியலைத் தந்தாலும் அதுவும் தோல்வியே யடையும். இதை இங்கிலாந்து துரைத்தனத்துக்கும், ஆங்கில மக்களுக்கும் அறிவுறுத்தவே நான் வந்தேன். வெள்ளைக் கடுதாசியைச் சீர்திருத்தா விட்டால் அது மிதவாதிகளுக்குக் கூடப் பிடிக்காது. இங்குள்ள நிலைமையைப் பார்த்தால் ஒன்றும் உருப்படியாகாதென்றே எண்ண வேண்டி யிருக்கிறது. ஆனால் உண்மை என்ன தெரியுமா? பிரிட்டிஷ் அரசு எரிமலையின் உச்சியில் உட்கார்ந்திருக்கிறது. இப்போதும் நீங்கள் கேட்காவிட்டால் மிதவாதிகளாகிய நாங்களும் மறைய வேண்டியதுதான்!"

இங்கிலாந்தில் ஒன்றும் உருப்படாது என்பதை ஸாப்ரு உணர்ந்து கொண்டு விட்டாரானல் இன்னும் ஏன் அவர் அங்கே தாமதிக்க வேண்டும்?

அயல் வீட்டு நெய்யே!

இந்தியாவினின்று வாரந் தவறாமல் தங்கம் ஏற்றுமதியாகிக் கொண்டே யிருக்கிறது. இதுவரை 126 கோடி ரூபாய் பொறுமான முள்ள தங்கம் போய் விட்டது. இந்தத் தேசிய நஷ்டத்தைத் தடுக்க வேண்டுமென எவ்வளவோ கேட்டுப் பார்த்தும் அரசாங்கத்தார் இதைத் தடுக்க மாட்டோமென்கிறார்கள். இந்திய அரசாங்கத்தின் இந்த அநியாயப் போக்கை சீமையில் ஸாமுயேல் ஹோரும் ஆதரிக்கின்றாரென்றால் வேறென்ன வேண்டும்?

அன்று பார்லிமெண்டில் இந்தியத் தங்க ஏற்றுமதியைப் பற்றிப் பேச்சு வந்த போது ஸாமுயேல் ஹோர், "இந்தியாவில் தனித் தனி ஆட்கள் சேமித்து வைத்திருக்கும் தங்கம் கரைவதால் இந்தியாவுக்கு நல்லதுதானென்று எனக்கும் இந்திய துரைத்தனத்துக்கும் தோன்றுகிறது. இவ்வாறு இந்தியத் தங்கம் ஏற்றுமதியாவதால் உலகுக்கே நன்மை யுண்டாகின்றது. இந்தியர்கள் எவ்வளவு தங்கம் சேர்த்து வைத்திருக்கிறார்களென்று கணக்குப் போடவும் முடியாது" என்று சொன்னாராம்.

"இந்தியாவினின்று தங்கம் பிறநாடுகளுக்குப் போய் விட்டால் இந்தியாவுக்கு நல்லது தான்" என்று சொல்கின்ற ஸாமுயேல் ஹோரின் சாஸ்திர ஞானத்தைக் கண்டு தெருவில் கீரை விற்பவள் கூடச் சிரிப்பாள். ஆனால் ஸாமுயேல் ஹோர் சொன்னதில் ஒன்றுமட்டும் உண்மை; இந்தியாவின் தங்கம் கரைவதால் உலகத்திலுள்ள இதர நாடுகளுக்கு நன்மை தான்! இந்தியாவினின்று ஏற்றுமதியாகிய தங்கத்தினால் இங்கிலாந்துக்கு அதிக நன்மை ஏற்பட்டிருப்பதை மறைவாக ஒப்புக்கொண்டு ஸாமுயேல் ஹோர் பேசி யிருப்பதாக நாம் கருத வேண்டி யிருக்கிறது.

"இந்தியாவின் தங்கம் கரையக் கரைய நல்லது தான்!" என்று கூறும் இந்த மகானின் வார்த்தை "அயல் வீட்டு நெய்யே! என் பெண்டாட்டி கையே" என்ற பழமொழியையே ஞாபகப்படுத்துகிறது.

இந்தியாவின் மானம்

(மிஸஸ் கைநத்பாடன், லண்டன்)

இங்கிலாந்துடன் அயர்லாந்து புரிந்த போராட்டத்தை மூன்று வருடங்களில் நான் கவனித்திருக்கிறேன். அதைப் போலவே இந்தியாவின் மகத்தான தேசியப் போராட்டத்தையும் மூன்று ஆண்டுகள் ஆழ்ந்த சிரத்தையுடன் கவனித்து வந்துளேன். இரண்டு நாடுகளிலும் டப்ளின், கார்க், பம்பாய், கல்கத்தா, ஆகிய நான்கு நகரங்களிலும் நிகழ்ந்த பல காட்சிகளை என் கண்ணாரக் கண்டிருக்கிறேன். அக்காட்சிகள் என் மனத்தைவிட்டு ஒருநாளும் அகலமாட்டா.

மிஸ்டர் லாயிட் ஜார்ஜு இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக விருந்த போது ஐரிஷ் காரர்களை சமரஸப் பேச்சுக்கு அழைத்தார். "பலாத்காரமில்லாத குற்றத்துக்குக் கைது செய்யப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளையெல்லாம் விடுதலை செய்யவேண்டும். அப்படி விடுதலை செய்யாதவரையில் எந்த ராஜிப் பேச்சையும் ஆரம்பிக்க மாட்டோம். எங்கள் சகோதர தேச பக்தர்கள் சிறையில் வாடி வதங்கிக்கொண்டிருக்கும் பொழுது, திருப்திகரமான ராஜி எப்படி ஏற்படும்?" என்று அவர்கள் உறுதியாகச் சொல்லி விட்டார்கள். கடைசியில் மிஸ்டர் லாயிட் ஜார்ஜ், வேண்டா வெறுப்புடன் அந்த நிபந்தனைக்கு இணங்கியே தீர வேண்டியதாயிற்று. அந்த ராஜிப் பேச்சின் போது நடந்த நிகழ்ச்சிகள் கவனிக்கத் தக்கவை.

இங்கிலாந்துக்கு வரும் முன் ஐரிஷ் பிரதிநிதிகள் ஒரு சங்கற்பமும் செய்து கொண்டார்கள். அது என்ன? "இங்கிலாந்தில் எந்த உபசாரத்தையும் ஏற்பதில்லை; எந்தக் களியாட்டங்களிலும் கலந்து கொள்ளுவதில்லை" என்பது அந்த சங்கற்பம். தங்கள் நாடு மிக நெருக்கடியான நிலைமையில் இருக்கும் போது அது எதிரிகளுடன் எவ்வாறு அண்ணன் தம்பியாகக் குலாவ முடியும் என்று அவர்கள் உணர்ச்சி கொண்டார்கள். ஆங்கிலேய அரசாங்கமும் மந்திரிகளும் நேசமாய் சரசம் செய்தாலும், உண்மையில் தங்கள் விரோதிகளே யென்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். ஆகையால், தங்கள் அரசியல் பகைவர்களால் தரப்படும் விருந்துகள் தங்களைப் பிடிக்கப் போடப்படும் வலைகளென அயர்லாந்து தேச பக்தர்கள் நினைத்தனர்.

இங்கிலீஷ் பிரதிநிதிகளுடன் கை குலுக்குவது மில்லை யென ஐரிஷ் பிரதிநிதிகள் தீர்மானித்து, இந்த முடிவை, மிஸ்டர் லாயிட் ஜார்ஜுக்கும் தெரிவித்து விட்டார்கள். இதனால் ஒரு தகராரும் ஏற்படாமலிருப்பதற்காக, மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் ஒரு தந்திரம் செய்தார். மகாநாட்டு மேஜையின் ஒரு பக்கம் பூராவும் ஆங்கிலேயர்கள்; மறு பக்கம் பூராவும் ஐரிஷ் காரர்கள். இவ்வாறு உட்கார ஏற்பாடு செய்தார். இவர்களும், அவர்களும் பரஸ்பரம் மரியாதையாகத் தலையை மாத்திரம் அசைத்து விட்டு, உட்கார்ந்து கொண்டார்கள்.

ஐரிஷ் பிரதிநிதிகள் ஒன்று மகாநாட்டு அறையில் விவாதித்துக் கொண்டிருப்பார்கள்; அல்லது தங்கள் விடுதிகளில், காரியதரிசிகளுடன் மறுநாள் அலுவலுக்குத் தயார் செய்து கொண்டிருப்பார்கள். சாவகாச நேரத்தை இன்பமான சம்பாஷணையிலும் சங்கீதத்திலும் கழிப்பார்கள். தங்களுக்குள்ளே சச்சரவிட்டுக் கொண்டார்களானால், அது வெளி யுலகத்தின் காதில் விழவே விழாது. மகாநாடு முடியும் வரை அவர்கள் நடந்து கொண்ட விதத்தை, அயர்லாந்து வாசிகள் மாத்திர மல்ல, இங்கிலீஷ்காரருமே போற்றிப் புகழ்ந்தார்கள்.

இப்போது இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் ஏதோ அரசியல் பேச்சு சீமையில் நடத்தப்படுகிறது. அங்கு சென்றுள்ள இந்தியப் பிரதிநிதிகள் விஷயமோ அதிசயமா யிருக்கிறது. ஒரு இரவு தவறாமல் ஆங்கிலேயருடன் கூடி, பிராந்தி குடித்து, உல்லாச விருந்துண்டு, நேரத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் நாட்டைச் சேர்ந்த சகோதரர்களோ தாய் நாட்டிலே சிறைக்குள் வதங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

" சிறைக் கதவுகளுக்குப்பின் சிலரிருக்கும் போது சமரசம் பேசோம் " என்று சில மாதங்களுக்கு முன் தானே ஸர் சாப்ரூ கூறினார். இப்பொழுது ஏன் இப்படி வார்த்தை புரண்டு விட்டார்? அரசியல் அமைப்பில் வெற்றிபெற வேண்டுமானால், சிறைக் கதவுகளைத் திறந்தேயாக வேண்டு மென்பதை அக்காலத்தில் ஐரிஷ்காரர்கள் அறிந்திருந்தார்கள். அரசியல் கைதிகளை விடாதவரை, இங்கிலாந்துக்கு வர அவர்கள் மறுத்து விட்டார்கள். இந்தியரும் ஏன் அவ்வளவு வலிமையுடன் நடந்து கொள்ளலாகாது?

—" மராட்டா "

பூனைக்கு வரி, பாட்டுக்கு வரி

(திப்பு எழுதியது)

வரப் போகிறார்! வரப் போகிறார்! யார்? யார்? ஒரு நிபுணர் இந்தியாவுக்கு வரப்போகிறார். எதற்கு? எதற்கு? இந்தியாவின் வரவு செலவு திட்டங்களைப் பற்றியும் இதர ரூபாய் அணா பைசா விஷயங்களைப் பற்றியும் அபூர்வ ஆலோசனைகளை சர்க்காருக்கு சொல்லித் தருவதற்காக அந்த நிபுணரை நியமிக்கப் போகிறார்களாம்! வெள்ளைக் கடுதாசி என்ற பழம் பஞ்சாங்கத்தில் அவருடைய வருகையைப் பற்றி ஜோஸ்யம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த உத்தியோகஸ்தர் தோன்றுவது முக்காலே மூணே வீசம் முக்கால் வீசம் நிச்சயம் தான். ஆகவே அந்த உத்தியோகத்துக்கு நானும் ஒரு அப்ளிகேஷன் போடலாமா வென்று உத்தேசித்திருக்கிறேன். பல்லாயிரக் கணக்கான ரூபாய் சம்பளமென்றால் பல்லை யிளிக்காதிருக்க முடிகிறதா? ஆனால் அந்த உத்யோகம் கறுப்பாகிய எனக்குக் கிடைக்குமா வென்பது சந்தேகமே! ஆயினும் என் சாமர்த்தியம் எனக்குச் சிபார்சா யிருக்கலாகாதா?

உத்தியோகத்துக்குத் தக்க சாமர்த்தியம் எனக்கிருக்கிறதா வென்று சந்தேகப்படலாம். ஆகவே எனக்குள்ள மூளையில் ஒரு மூலையை இன்று விரித்துக்காட்ட உத்தேசித்திருக்கிறேன். இந்திய துரைத்தனத்துக்கு இப்போது வரி வரும்படி போதவில்லை. ஆகவே இன்னும் சில புதிய வரிகளைப் போட்டால் கட்டாயமாய் சர்க்காருர்கு வரும்படி அதிகமாகும். ஆகவே சில புதிய வரிகளை எப்படி விதிக்கிறது என்று சொல்கிறேன் கேளுங்கள்.

1. வீட்டில் வளர்க்கப்படும் பூனை ஒவ்வொன்றுக்கும் வருடத்துர்கு எட்டணா லைசன்ஸ் தொகை போடலாமென ஓர் யோசனை. இந்த கைய வரி, ஜிகோஸ்லோவோகியா தேசத்தில் ஒரு காலத்தில் போடப்பட்டது.

2. தேசத்தின் ஜனத் தொகை அதிகமானால் சர்க்கார் வரிப்பணமும் கொஞ்சம் அதிகமாகும். ஜனத் தொகை அதிகமாகாதவாறு சில சூழ்ச்சிக்காரர்கள் தடை செய்து வருகிறார்கள். ஏன் இந்த பிரும்மசாரிகள் மீதும், கன்னியாப் பெண்கள் மீதும் ஒரு தனி வரி போடலாகாது? இப்படி ஓர் வரி விதித்தால் சர்க்காருக்கு நல்ல வருமான முண்டு. இத்தாலியா தேசத்தில் இத்தகைய வரி போட்டதண்டு.

3. தலை மயிரைக் கத்தரித்துக் கொள்வதை ஒரு ஷோக்காக நாகரிகப் பெண்மணிகள் கருதுகின்றனர். 'ஷோக்கு'க்கு வரி விதிக்க சர்க்காருக்கு உரிமை யுண்டு. ஆகவே இனி 'ஷிங்கில்' பண்ணிக் கொள்ளும் பெண்மணிக்கும் 'பாப்' பண்ணிக் கொள்ளும் ஸ்திரீக்கும் வருடத்துக்கு ஒரு ஒரு ரூபா தலை வரி விதிக்கலாமென ஓர் உத்தேசம். இந்த மாதிரி ஒரு வரி ஆஸ்திரியா தேசத்துக் கிராமங்களில் விதிக்கப்பட்டு வருகிறதாம்.

4. ரோட்டில் போகும் போதே "தினமணி வம்ச—அ. அ. அ. அ." என்று சிலர் முணுமுணுக்கின்றனர். நான் குடியிருக்கும் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒருவன் "பரதவித்தோமே! பரதவித்தோமே" என்று கர்ண கடூரமாகக் கதறிக் கொண்டிருக்கிறான். இது ஒரு 'நியூசன்ஸ்'. இந்த சங்கீதக் கொலைக்குத் தண்டனை விதிக்க வேண்டுவது நியாயமே! ஆகவே எவனெவன் வாயைத் திறந்து பாடுவதானாலும் முதலில் சர்க்காரிடம் ஒரு ரூபா செலுத்தி லைசென்ஸ் பெற்றிருந்தால்தான் பாடலாம் என்று ஏற்பாடு செய்து விடுவேன். அவுரங்கசீப் மன்னவன் சங்கீத வித்வான்களைத் தண்டித்தானென்று ஒரு கதை உண்டு. நான் ஏன் சங்கீத வரியாவது போடக் கூடாது?

5. 'வில்லி பிராங்கா' என்ற நகரத்தில் ஓர் விநோதமான வரி விதித்திருந்தனர். சரீரத்தில் இரட்டை நாடியாகவும், அனுவசியச் சதைப் பிண்டமாகவும் இருக்கின்றவர்களை தராசில் எடை போட்டு எடைக்குத் தகுந்தாற் போல வரி விகிதம் அங்கு வசூலிக்கப்பட்டது. அந்த ஊரில் என்ன செய்தார்களாம் தெரியுமா? ஏப்ரல் மாதம் வருவதற்கு முன் பெரிய பெரிய பிரும்மாண்ட ரூபங்களெல்லாம் பல வாரங்கள் பட்டினி கிடக்குமாம்; உடம்பின் எடை குறைந்து போகுமாம். ஏப்ரலில் ரிவினியூ இனிஸ்பெக்டர் வரி விதிக்க வரும் போது வரித் தொகையைக் குறைத்துக் கொள்ள இந்த யுக்தி செய்தார்களாம்! நான் இந்த ஸ்தூல சரீர வரியை விதித்து திடீர் திடீரென்று சோதனை போட்டு வரியை வசூலிக்கலாமென சர்க்காருக்கு யோசனை சொல்லித் தருவேன்.

6. யூகோ ஸ்லேவியா நாட்டில் வருஷந்தோறும் பரீக்ஷையில் பாஸ் செய்யும் பையன்கள், சர்க்காருக்கு ஓர் வரி தரவேண்டுமாம். இந்த வரியை இந்தியாவிலும் நுழைத்தால்

வருடந்தோறும் 'பெயில்' ஆகும் பையன்களுக்கு சந்தோஷமா யிருக்கு மல்லவா?

7. கிராஸ்வர்ட் பஸ்ஸூல், படப் போட்டிப் பரிசு, முதலிய பல போட்டிப் பந்தயங்களை நடத்தும் பத்திரிகைக்காரர்கள் இதர பத்திரிகைகளைவிடக் கொஞ்சம் அதிகமாகவே காசு சம்பாதிக்கின்றனர். ஆகவே சர்க்கார் அதிக வருமானத்தில் பங்கு கேட்பதில் தப்பிதமில்லை. நான் அதிகாரியானுல் இதற்கு வரி போட்டே திருவேன்.

8. பொதுக் கூட்டங்களிலும் சட்ட சபைகளிலும் சிலர் பிரசங்கங்களை வீட்டிலேயே எழுதிக் கொணர்ந்து படிக்கின்றனர். பிரசங்கம் செய்வதில் அவர்களுக்கு அவ்வளவு இஷ்டம்! ஆகவே அந்த அனுவசிய ஆசைக்கு வரி போடுவதில் தப்பிதமில்லை யல்லவா?

இந்த மாதிரி ஆயிரக்கணக்கான புது ஆலோசனைகளை சொல்லித் தரும் சக்தியுடைய எனக்கா அந்த 'நிபுணர்' உத்யோகம் கிட்டாது போகும்? ஒரு கை பார்க்கிறேன்!

மீசைக்குப் பூசை போடல்

உலகத்தில் மீசைக்கு இவ்வளவு பெருமை வருமென்று எவரும் நினைக்கவில்லை. ஜர்மனியில் இன்று அட்டகாசம் செய்யும் ஹிட்லரின் உதட்டில் ஈ உட்கார்ந்தது போல சின்ன மீசை யிருந்து வருகிறது. அதைப்பற்றி பிரமாதமாக வர்ணிக்கிறுர்கள். கிழக்கே ஜப்பானில் ஜெனரல் 'நகாவோகா' என்பவர் சமீபத்தில் காலமானுர். அவருக்கும் அவர் மீசை பெருமை தந்தது.

ஜெனரல் நகாவோகா ஆகாய விமானப் படையின் தலைவராயிருந்தவர். அவருடைய உத்தியோகத்தைவிட அவருடைய மீசை உலகெங்கும் பிரசித்தியாயிருந்தது. அவர் மீசையை ஒரு கோடியினின்று இன்னொரு கோடிக்கு அளந்தால் 19½ அங்குல நீளம் இருந்ததாம். என்ன கஷ்டப்பட்டு இவ்வளவு நீளம் வளர்த்தாரோ அந்தப் பெரியவர்.

அவர் சாகும்போது தமது மீசை உலகிலிருக்க வேண்டுமென உயிலெழுதி வைத்துச் சென்றுராம். அதற்காக அவரது சவச் சடங்கு தினத்தில் அவரது குமாரன் அவர் மீசையைச் சிரைத்தெடுத்து கண்ணுடிப் பெட்டியில் வைத்துப் பூசை போட்டானும். என்னே மீசைக்குப் பூசை!

காந்திஜியின் ஹாஸ்யம்

மகாத்மாவின் உபவாஸ விரதம் முடிவடைய இன்னும் நான்கு நாட்கள் தானிருக்கின்றன. சிம்ஹகடாக் கோட்டைக்கு அருகிலிருந்து எடுக்கப்படும் ஊற்று ஜலம் தான் அவருக்கு தாக சாந்திக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. காந்திஜி ஒரு நாளைக்கு சுமார் மூன்றுபடி ஜலம் அருந்துகிறுர். திருச்சூரினின்று ஹரிஜனச் சிறுவர்கள் மகாத்மாவுக்கு ஒரு புட்டி இயற்கைத் தேன் அனுப்பி யிருக்கின்றனர். மகாத்மா விரதம் முடிந்ததும் அந்தத் தேனை அருந்த வேண்டு மென்பது சிறுவர்களின் வேண்டு கோளாகும்.

ஒரு ஏழை அரையணு ஸ்டாம்பை காந்தியடிகளுக்கு அனுப்பி "என்னுலானது இவ்வளவு தான். திங்கட்கிழமை உபவாசம் முடிப்பதற்கு இதைக் கொண்டு ஒரு எலுமிச்சம் பழமாவது வாங்கிக் கொள்ள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டிருக்கிறுனும்.

இப்பொழுது மகாத்மா ஆபத்து எல்லையில் இருப்பதாக சில டாக்டர்கள் அபிப்பிராயப் படுகிறுர்கள்.

மகாத்மா ஹாஸ்யமாக அவ்வப்போது நண்பர்களிடம் பேசிக் கொண்டிருக்கின்றுர்.

சென்ற செவ்வாயன்று "உடம்பு எவ்வாறிருக்கிறது" என்று மகாத்மாவை ஒரு டாக்டர் கேட்டார். "பூவா, தலையா ஆட்டத்தில் பூவிலிருந்தாலும் எனக்கு வெற்றி; தலையானுலும் எனக்கே வெற்றி" என்று சிரித்துக் கொண்டே மகாத்மா கூறினுர்.

சேனுபதியின் பக்தி

மகாராஷ்டிரத் தலைவரான சேனுபதி 'பாபட்' என்பவர் சிறையில் இருக்கின்றுர். மகாத்மாவின் உயிர் நிலைக்க வேண்டுமென ஆண்டவனை நோக்கி அவர் உண்ணுத் தவம் கிடக்கின்றுர். உபவாஸ விரதத்தை அவர் விட்டுவிட வேண்டுமென மகாத்மாவிட மிருந்தும் ராஜாஜியிட மிருந்தும் தந்திகள் சென்றன. பாபட் தமது உறுதியை விட மறுத்து விட்டாராம்.

துண்டு துணுக்குகள்

தொலையாதோ வகுப்புப் பேய்?

சென்னைக் கார்ப்பொரேஷன் மேயர் பதவி சம்பந்தமாக ஓர் பாழும் சம்பிரதாயம் இருந்து வருகிறது. பிராம்மணர், பிராம்மணரல்லாதார், கிருஸ்தவர், முகம்மதியர் ஆகிய ஒவ்வொரு ஜாதியாரும் முறை போட்டுக்கொண்டு, கார்ப்பொரேஷன் மேயர் நாற்காலியில் உட்கார வேண்டுமென்பதுதான் அந்த சம்பிரதாயம். இந்தப் பாழும் வகுப்பு வாதமுறை தொலையவே தொலையாது போலிருக்கிறது. முன்னே பிராம்மணர் முறை வந்தது. "இந்த வருஷம் மாத்திரம் இந்த சம்பிரதாயம் இருக்கட்டும். அடுத்த வருடம் நீக்கி விடுவோம்" என்று அப்பொழுது சிலர் கூக்குரல் போட்டார்கள். இப்பொழுது கிருஸ்தவர் முறை வந்திருக்கிறதாம். இந்த சமயத்தில் இதை எடுத்துவிடக் கூடாதென்று சிலர் வாதிக்கிறார்கள். இவ்வாறு ஜாதி வாரியாக ஒவ்வொரு வருடத்திலும் ஏதோ ஒரு ஜாதிக்கு, முறை வந்து கொண்டே தானிருக்கும். "என் ஜாதி உரிமை போகலாகாது" என்று அவரவர்கள் கூச்சல் போட்டே தீருவார்கள். இந்த வகுப்பு வாதப் பேய் எதிலாவது புகுந்தால், சுலபத்தில் அது தொலைவதில்லை; பெருங் கசப்பு, மனவருத்தம், பிளவுகள் ஆகியவற்றை அதிகமாக்குவதில் இந்த ஜாதிப் பித்தம் அதிக திறமையுடையதே.

சைகோன் செட்டியார்கள்

சைகோனிலுள்ள செட்டியார்கள், முதல் பந்தகக் கடன்களில் நூற்றுக்கு 25-ம் மற்றக் கடன்களில் 100-க்கு 40-ம் கழித்துக்கொண்டு பாக்கியைப் பெற வேண்டுமாம். இந்தத் தொகையிலும் 100-க்கு 10 பங்குத் தொகையை மட்டில் தான் இப்பொழுது பெறலாமாம். மீதியைப் பல தவணைகளாக 15 வருடங்களில் வாங்கிக்கொள்ளவேண்டுமாம். இவ்வாறு சைகோன் அரசாங்கத்தார் செட்டிமார்களுக்கு ஒரு நிபந்தனை கூறியிருக்கிறார்கள். செட்டியார்களுக்கு இது பிடிக்காமல், சிம்லா, லண்டன் அதிகாரிகளுக்குத் தந்திகள் அடித்திருக்கிறார்களாம். இந்த விஷயம் ஆமை கதியிலேயே போய்க் கொண்டிருக்கின்றதே யொழிய, சூட்டோடு சூடாக ஒரு முடிவு ஏற்படப் போவதாகக் காணோம்.

வெள்ளியை விழுங்கவா?

ஒரு வனத்தில் சில மிருகங்கள் நேசமாயிருந்தனவாம். ஒரு நாள் அவற்றிற்குப்போதிய ஆகாரம் கிடைக்கவில்லை. எல்லாம் சேர்ந்து ஒரு மகா நாடு கூடின. சிங்கம் அதற்கு அக்கிராசனம் வகித்தது. ஆகாரத்துக்கு என்ன ஏற்பாடு செய்வது? நரி, புலி, கரடி, முள்ளம் பன்றி, சிறுத்தை முதலிய ஒவ்வொன்றும், "தேகம் அநித்தியம். நண்பர்களுக்கு இந்த சமயத்தில் உதவாத இந்த உடம்பை வைத்துக் கொண்டிருந்து என்ன பயன்? என்னைக் கொன்று நீங்கள் எல்லாரும் வயிறார சாப்பிட்டு, உங்கள் பசியை நீக்கிக் கொள்ளலாம்" என்று தனித் தனியாகச் சொல்லின. இதெல்லாம் 'பாசாங்குப் பேச்சு' என்று மற்றவைகளுக்கு தெரியாதா? ஆகையால், இவற்றின் யோசனையெல்லாம், மகா நாட்டில் தோல்வியுற்றன. ஆனால், கடைசியில் ஒட்டகமும் மானும் "எங்கள் உடம்பில் நல்ல தசையிருக்கிறது. உங்கள் யாவருக்கும் போதும். சாப்பிடுங்களேன்" என்றன. இவை இதைச் சொல்லி வாய் மூடவில்லை; மானும் ஒட்டகமும் இருந்தவிடம் தெரியாமல், மற்ற விலங்குகள் அவற்றின் மீது விழுந்து பிடுங்கி, தங்கள் தொந்தியை நிரப்பிக் கொண்டன.

லண்டனில் நடக்கப் போகிற உலகப் பொருளாதார மகாநாடும் இப்படித்தான் முடியுமோ என்றே சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இந்த மகாநாடு ஜூன் மீ 12உ லண்டனில் கூடப் போகிறதாம். 40 தேசங்களிலிருந்து 620 பேர் இதற்கு விஜயம் செய்யப் போகிறார்களாம். இப்படிப்பட்ட மகாநாட்டின் நோக்கமென்ன?

மிஸ்டர் ரூஸ்வெல்டுக்கு அந்தரங்க யோசனை சொல்லும் மிஸ்டர் மாலீ என்பவர் சொல்லும் ஒரு விஷயத்தைப் பார்த்தால், பொருளாதார மகாநாட்டின் யோக்கியதை விளங்கும். "வெள்ளியை நாணயமாகச் செய்து விட வேண்டுமே யென்று இப்பொழுது யாரும் கவலை கொள்ளவில்லை. அதன் விலையைத்தான் உயர்த்தப் போகிறோம். அதனால் நமது சாமான்களைப் பிற நாடுகள் வாங்க சாத்தியமாக்க வேண்டும்" என்கிறார் அவர். இதன் அர்த்தமென்ன? இந்தியா, சைனா போன்ற நாடுகளின் தலை மீது தங்கள் சாமான்களைச் சுமத்தி, அவற்றினிடம் மிச்சம் மீதியாகவிருக்கும் வெள்ளியையும் தாங்கள் வறண்டிக் கொள்ள வல்லரசுகள் விரும்புகின்றன வென்று சந்தேகம் தோன்றாதா?

ஐரோப்பாவில் யுத்த வெறி (குசேலன் எழுதியது)

இனி உலகில் யுத்தங்களே நடக்கக் கூடாதென விரும்பும் அறிஞர்கள் 'ஆயுதப் பரிகரணம்'' என்ற ஆலோசனையை எழுப்பினார்கள். ஆனால் ஒரு அரசாங்கமாவது ஸர்வ தேச சபையையும், ஆயுதப் பரிகரண மகாநாட்டையும் தனியாவது பொருட் படுத்துவது கிடையாது. அவ்வாறு சிரத்தைக் குறைவு காட்டுகின்ற நாடுகளில் ஜர்மனி அரசாங்கமும் ஒன்றாகும்.

ஐரோப்பிய மகாயுத்தத்தின் இறுதியில் வர்ஸைல்ஸ் உடன்படிக்கையில் ஜர்மானியர் கையெழுத்திடுமாறு செய்யப்பட்டனர். அவ்வுடன்படிக்கையில், ஜர்மன் அரசாங்கம் ஒரு லக்ஷம் போர் வீரர்களடங்கிய இராணுவத்தைத் தான் வைத்துக் கொள்ளலாமென்று கட்டுப்பாடு செய்யப்பட்டது. ஆனால் இன்றைக்கு ஜர்மனியில் 1 லக்ஷம் போர் வீரர்கள் தானிருக்கின்றார்களா? உண்மையைப் பார்க்கப்போனால் அநேக லக்ஷம் போர் வீரர்கள் ஜர்மனியில் இன்று இருந்து வருகின்றனர். ஒவ்வொரு ராஜீயக் கட்சிக்கும் ஒரு இராணுவம் இருந்து வருகிறதை நிதரிசனமாகக் காணலாம்.

சென்ற மகா யுத்தத்துக்கு முன்னே ஜர்மனியில் கெய்ஸர் ஆட்சியின்கீழ் ராஜாங்க ராணுவம் மட்டும் தானிருந்தது. ஒவ்வொரு இளைஞனும் இராணுவப் பயிற்சி பெற்றே தீர வேண்டுமென சட்டம் இருந்தது. அதனால் ஜர்மானியர் போர்த் தொழிலில் சக்தி மிகுந்தவராயிருந்தனர். ஆனால் வர்ஸைல்ஸ் உடன்படிக்கை ஜர்மானியரைக் கட்டிப் போட விரும்பியதால் ஜர்மனியின் தலைவர்கள் அநேக தொண்டர் படைகளை சிருஷ்டிக்க முயன்றனர்.

ஹிட்லரின் கட்சியில் லக்ஷக்கணக்கான இளைஞர்கள் சேர்ந்து இராணுவப் பயிற்சி பெற்றுளர். 'சண்டமாருதப் படை' (Storm Troops) என்ற பெயருடைய தொண்டர் படை போர்க்கலையில் நன்றாகப் பழகியிருக்கிறது. அதைத் தவிர இராணுவ உத்தியோகத்திலிருந்து விலகிய வீரர்களெல்லாம் சேர்ந்து ஓர் தனிச்சங்கம் (Stahlhelm) இருந்து வருகிறது. அவர்கள் தொகை மட்டும் 10 லக்ஷமென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஜன்ம பூமியை ஜர்மானியர் "தந்தை நாடு" என்று செல்வமாக அழைப்பது வழக்கம். தந்தை நாட்டுக்கு ஆபத்து வருவதாகத் தெரிந்தால் இரத்தம் சிந்துவதற்குத் தயாராயுள்ள இளைஞர்கள் பலர் சேர்ந்து "தற்காப்புச் சங்கங்கள்" (Wehrever bande) பலவற்றை நிறுவியிருக்கின்றனர். இப்படியாகப் பல விதமான ரூபங்களோடு பல இராணுவங்கள் ஜர்மனியில் இருந்து வருகின்றன. ஆயுத வகைகளுக்கும் குறைவில்லை. இந்த மாதிரி கணக்கு வழக்கின்றி ஆயுதபலமும் ஆள்பலமும் பல நாடுகளில் இருந்து வரும்போது ஆயுதப்பரிகரண மகாநாடு உருப்படுமா?

ஐரோப்பாவில் இப்போது ஒரு நாடு இன்னொரு நாட்டிடத்தில் 'அவநம்பிக்கை' காட்டுவதுதான் அதிகமாயிருந்து வருகிறது. எலியும் பூனையும் போல, பாம்பும் கீரியும் போல ஒருவர்மீதொருவர் கண்களைச் செலுத்திக் கொண்டிருந்தால் இதன் முடிவு என்னவென்று சொல்ல வேண்டுமா? ஐரோப்பாவில் 'ஆயுதப் பரிகரணம்' என்ற பேச்சு தொடங்கிய பின்புதான் இத்தாலி தேசம், முஸோலினியின் கெடுபிடியான ஆட்சியின் கீழ் இராணுவப் பலத்தை அபிவிருத்தி செய்து கொண்டது. ஆயுதப் பரிகரணம் என்ற பேச்சு வளர்ந்து கொண்டேயிருக்கும்போது கிழக்கே சீனர்களும் ஜப்பானியர்களும் சுட்டு வீழ்த்திக்கொண்டேயிருக்கின்றனர். ஸர்வதேச சங்கத்தை நாடுகள் மதிக்காதது போல ஆயுதப்பரிகரண நாட்டையும் யாரும் மதிப்பதில்லை. மேலும் ஆயுதப்பரிகரண மகாநாட்டில் பெரிய பிரசங்கங்களைச் செய்பவர்கள் பலர்கள் அந்தந்த நாட்டில் சர்வ சக்திமான்களாக இருக்கின்றார்களா, அதுவுமில்லை. உதாரணமாக இங்கிலாந்திலிருந்து தொழிற் கட்சித் தலைவரான மிஸ்டர் ஹெண்டர்ஸன் அம்மகாநாட்டில் தலைமை வகித்தார். அவர் இங்கிலாந்து தேர்தலில் தோற்றுப் போனவர். அயர்லாந்து தலைவன் டிவாலரா ஒரு கூட்டத்துக்குத் தலைமை வகித்தான். அயர்லாந்தோ பூர்ண சுயேச்சை யடைந்த நாடுமல்ல. ஆகவே ஆயுதப் பரிகரணம் விஷயமாக இதர நாடுகளை வற்புறுத்த டிவாலராவால் அப்படி முடியும்? இப்பேர்ப்பட்ட ஓர் மகா நாட்டினால் உலகத்துக்கு க்ஷேமம் ஒருக்காலும் பிறக்காது. ஐரோப்பிய சமாதானத்தை ஏற்படுத்த இம்மகா நாட்டுக்குச் சக்தி கிடையாது என்று நிச்சயமாக நாம் சொல்லலாம்.

(இன்னும் வரும்)

சாராய சமுத்திரம்

ஏழு சமுத்திரங்களில் சாராய சமுத்திரம் என்று ஒன்றிருப்பதாகப் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கற்பனை ஓர்புறமிருக்க இப்போது உலகெங்கும் உற்பத்தியாகும் கள்ளையும் சாராயத்தையும் சில வருடங்கள் எவரும் குடிக்காமல் ஓரிடத்தில் கொட்டி வைத்திருந்தால் ஒரு பெரிய சாராயக்கடல் தயாராகி விடுமென்று தோன்றுகிறது. ஒஸ்தி ரகமான சாராயம் உலகில் வருடா வருடம் எவ்வளவு தயாராகிறதென்று ஒருவர் 'குத்து மதிப்பு' போட்டு ஓர் கட்டுரை எழுதியிருக்கிறார். 385 கோடி காலன்கள் (Gallons) அசல் ஒன்றாம் நம்பர் சாராயம், 1932ம் வருஷத்தில் உற்பத்தியாக்கப் பட்டதாகத் தெரிகிறது. முந்திய வருஷத்தை விட 70 லக்ஷம் காலன்கள் அதிகமாகி யிருக்கின்றனவென்று லிஸ்பன் நகரின் கணக்கு கூறுகின்றது. இத்தனை நாள் மதுவை விலக்கியிருந்த அமெரிக்காவிலும் இனி புட்டிகள் உருளப் போகின்றன. ஆகவே இன்னும் சாராயத் தொழில் மேனாடுகளில் அதிகமாகும். மேனாட்டாரில் சிலர் இப்போது சாராயப் பித்தங் கொண்டு, எந்த சமுத்திரத்தைப் பார்த்தாலும் "இது சாராய சமுத்திரமாயிருக்கலாகாதா" என்று வருந்துகின்றனரென்றால் அதில் ஆச்சரிய மேதுமில்லை. இப்படி வருந்தப் பட்டுக் கொண்டிருக்கும் மேனாட்டினருக்கு இரங்கி இந்தியாவிலுள்ள குடிகாரர்கள் விட்டுக் கொடுக்க வேண்டும். அத்தனை சாராயத்தையும் மேனாடுகளே குடித்துவிட்டுக் கூத்தாடிக் கொண்டிருக்கட்டுமே! இந்திய சர்க்கார் சாராய இறக்குமதியைத் தடுப்பார்களாயின் இந்தியாவும் நன்றி கூறும்; மேனாடுகளும் இந்திய துரைத்தனத்துக்கு நன்றி கூறும். குடித்துக் குடித்து இந்தியர் குடியழிந்தது போதும்.

தௌலத்ராம் விடுதலை

மே௴ 8௳ கைது செய்யப்பட்ட ஸ்ரீ ஜெயராம் தாஸ் தௌலத்ராம் விடுதலையடைந்தார். ஆனால், 24-மணி நேரத்திற்குள் பம்பாயை விட்டு வெளியேறி சிந்து ஹைதராபாத்தில் வசிக்க வேண்டுமென்றும் அனுமதியின்றி மறுபடியும் பம்பாய்க்கு வரலாகாதென்றும் உத்திரவு போட்டிருக்கிறார்கள்.

ராஜா வெளி யேற்றம்

ஆள்வார் மகாராஜா, இந்திய சர்க்கார் கட்டளைக் கிணங்கி, தமது ராஜ்யத்தை விட்டு வெளியேறச் சம்மதித்து விட்டார். அவர் இந்தியாவை விட்டகன்று, 'ஆபு' மலையில் இரண்டு வருடங்கள் அஞ்ஞாதவாசம் புரிவாராம். இந்தக் காலத்தில், சமஸ்தானத்தில் சர்வாதிகாரமும் செலுத்தும்படி மிஸ்டர் வைலீ என்பவருக்கு வைசிராய் அனுமதி தந்திருக்கிறார். ராஜா தம் சொந்தச் செலவுக்கு வருடம் ஒன்றுக்கு இனி மூன்று லட்சம் ரூபாய் பெற்றுக் கொள்வாராம்.

எல்லைப்புறத்தில்

செஞ்சட்டைத் தொண்டர்களின் தலைவர் உமாகானும் இன்னும் மூன்று தலைவர்களும் உத்தமான்வி என்ற கிராமத்துக்கருகே கைது செய்யப்பட்டனர். அந்தக் கிராமம் தான் அப்துல் கபார்கானின் ஊராகும்.

எவரெஸ்ட்டுக்கு யூனியன் ஜாக்!

மிஸ்டர் மாரிஸ் வில்ஸன் என்ற லண்டன்காரர் எவரஸ்ட்டு உச்சிக்கு ஆகாய விமானத்தில் பறக்கப் போகிறாராம். எவரஸ்ட் சிகரத்திலும் யூனியன் ஜாக் பறக்க வேண்டுமென்பது அவர் ஆசையாம். அவர் எவரெஸ்ட்டு சிகரத்தை அடையவே மாட்டாரென அவரது நண்பர்கள் அபிப்பிராயப் படுகின்றார்களாம்.

ஊட்டியில் தேசீயக் கொடி

உதகமண்டலத்தில் குதிரைப் பந்தயத் திடலுக்கு எதிரே எல்க் குன்று உச்சியில் ஓங்கி வளர்ந்த மரமொன்றின் உச்சாணிக் கொம்பில் மூன்று வர்ண இந்தியத் தேசியக் கொடி ஒன்று பறந்து கொண்டிருந்ததாம். இதைப் பார்த்து ஜனங்கள் அங்கு ஏராளமாகக் கூடிவிட்டார்களாம்.

ஒரு சினிமாக்காரரின் தாராளம்

சென்னை வாலாஜா ரோட்டில் புதிதாக நிர்மிக்கப்பட்டுள்ள பாரகன் டாக்கீஸ் என்ற காட்சிச் சாலையார் 100 ஹரிஜனக் குழந்தைகளை சென்ற 22-ம் தேதியன்று இனமாக அனுமதித்தனர்.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.